AG PRAYER COMMISSION

# எழுந்து பிரகாசி

21 நாட்கள் உபவாசமும் ஜெபமும்

21 மார்ச் - 16 ஏப்ரல்

எழும்பி பிரகாசி, உன் ஒளி வந்தது

ஏசாயா 60:1

அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்

லூக்கா 24:6

# எழுந்து பிரகாசி

வாரந்திர கருப்பொருள்:

**உன் ஒளி வந்தது!**

வாரம் 1 (27 மார்ச் - 2 ஏப்ரல்)

**எழுந்து பிரகாசி!**

வாரம் 2 (3 ஏப்ரல் - 9 ஏப்ரல்)

**அவர் உயிர்தெழுந்தார்!**

வாரம் 3 (10 ஏப்ரல் - 16 ஏப்ரல்)

AG PRAYER COMMISSION

# எழுந்து பிரகாசி

**முழு உபவாசம்**

24 மணிநேர திடமான உணவை தவிர்க்கவும். தண்ணீா மாத்திரம் எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் 21 நாட்களுக்கு மேல் உபவாசத்தை தொடர விரும்பினால், உங்கள் மருத்துவரின் ஆலோசனையை பெற வேண்டும்

**பகுதி உபவாசம்**

நாளின் ஒரு நீண்ட பகுதி முழுவதும் திட உணவை தவிர்க்கவும். தண்ணீா மாத்திரம் எடுத்துக் கொள்ளுங்கள். உபவாசத்தின் காலமானது காலை 7 மணி முதல் மாலை 7 மணிவரை, 12 மணி நேரமாகும். லேசான சிற்றுண்டியுடன் உங்கள் உபவாசத்தை முடிக்கவும்.

**ஒரு நேர உபவாசம்**

ஒரு நாளைக்கு ஒரு முழு உணவை தியாகம் செய்யவும். எ.கா. மதிய உணவு, இரவு உணவு. அடுத்த உணவு வரை உபவாசத்தில் இருக்க வேண்டும்.

**தானியேல் உபவாசம்**

இறைச்சி மற்றும் பிற விருப்பமான உணவுகளை தவிர்க்கவும். காய்கறிகள், பழங்கள் மற்றும் பழச்சாறுகளில் சிறிய பகுதிகளை மாத்திரமே எடுத்துக் கொள்ளுங்கள். வழக்கமாக 10 நாட்களுக்கு இவற்றை பாதுகாப்பாக பயிற்சி செய்யவும்.

உபவாச வீரர்கள்

# எழுந்து பிரகாசி

## எப்படி உபவாசிப்பது

**தினசரி தியான வசனங்களை படித்து,** வேதத்தை தியானியுங்கள்

**தேவனை தேடும்படிக்கு நேரத்தை ஒதுக்குங்கள்.** உங்கள் இருதயம் அவருடைய சத்தத்தை கேட்பதற்கு ஒருமுகப்படுத்துங்கள். வார்த்தையின் மூலமாகவும் பட்டியலிடப்பட்ட காரியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

**வீட்டிலோ, பள்ளியிலோ அல்லது வேலை ஸ்தலங்களில்** நீங்கள் வழக்கமாக கடமைகளை செய்யும்போதுகூட ஜெபிக்கும் மனப்பான்மையை கடைப்பிடிக்கவும். அதிகமாக அந்நியபாஷையில் ஜெபியுங்கள்.

**உங்கள் வழக்கமான செயல்பாடுகளை குறைக்கவும்.** தீவிரமான உடற்பயிற்சிகளை தவிர்க்கவும். உணவிலிருந்து உபவாசம் இருப்பதை தவிர்த்து, தொலைகாட்சி நிகழ்ச்சிகள், கணினி விளையாட்டுகள் போன்ற **உங்களை திசைத்திருப்பும் விஷயங்களிலிருந்து உபவாசம் எடுக்கலாம்.**

AG PRAYER COMMISSION

# எழுந்து பிரகாசி

## உன் ஒளி வந்தது

*வாரம் 1 (27 மார்ச் - 2 ஏப்ரல்)*

# எழுந்து பிரகாசி

# அவர் வந்துள்ளார்.

*லூக்கா 19:41-44*

நாம் தேவனுடைய தெய்வீக வருகையின் நாட்களில் வாழ்கிறோம். தொற்றுநோயின் பேரழிவு தாக்கம் இருந்தபோதிலும், அவரது ஆவி அவரது சபைகளில் ஆழமாக உணரப்படுகிறது. குழப்பத்தில் இருந்து, அவருடைய ஜனங்கள் மீண்டும் அவருடைய பிரசன்னத்தை நாடுகிறார்கள். பின்வாங்கிப்போனவர்கள் தேவனிடத்தில் திரும்புகிறார், பாவிகள் இரட்சிக்கப்படுகிறார்கள். மீண்டுமாக ஜனங்கள் தேவனுடைய நாமத்தை நோக்கி கூப்பிடுகிறார்கள். நம்முடைய உறக்கத்திலிருந்து விழித்தெழுந்து தேவனுடைய ராஜ்யத்திற்குள் நுழைய வேண்டிய நேரம் இது. நம்முடைய வருகை நேரத்தை அடையாளம் கண்டு ராஜ்யத்தைக் கைப்பற்றுவதற்கான நேரம் இது. தேவனுடைய இளைபாறுதலில் நுழையும் நேரம் இது!

## நாள் 1

**ஞாயிறு 27 மார்ச்**

**ஜெப நோக்கம்:**

*1. அவரது வருகையின் நேரத்தை அறிந்துக் கொள்ள திருசபை தயாராகவும் இருக்க வேண்டும்.*

*2. பொது மேற்பார்வையாளர் / பிஷோப் சங்கை ஓங் செக் லியாங்*

*3. பிரதமர்: YAB டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப்*

AG PRAYER COMMISSION

# எழுந்து பிரகாசி

## மாற்றத்திற்கான நேரம்

*மாற்கு 1:14-15*

நம் வாழ்க்கை தேவனுடைய இயல்பு மற்றும் குணாதிசயத்துடன் இணைந்திருந்தால், அவருடைய ஆசீர்வாதமும் தயவும் நம் வாழ்வில் வழிந்தோடும். அவருடன் சார்ந்திருப்பது என்பது அவர் பரிசுத்தமாக இருப்பதால், நாமும் பரிசுத்தமாக இருக்க வேண்டும். அவர் ஒளியாயிருக்கிறார், நாமும் அவருடைய ஒளியில் நடக்க வேண்டும். ஒருவர் எப்படி தேவனோடு சார்ந்திருப்பது? மனந்திரும்புதலின் மூலம் நாம் தேவனோடு இணைகிறோம். மனந்திரும்புதல் என்றால், தேவனுக்கு பிரியமில்லாத எல்லாவற்றையும் தள்ளிவிட்டு, அதற்கு பதிலாக கிறிஸ்துவால் மாதிரியாக காட்டப்பட்ட வாழ்க்கையை வாழ மாற்றுவதாகும். மனந்திரும்புதல் இல்லாமல் எழுப்புதலுக்குள் நுழைய முடியாது. அதனால்தான் யோவான் ஸ்நானகன் மற்றும் இயேசு இருவரும் மனந்திரும்புதலுக்கு அவரது ராஜ்யத்தைப் பெறுவதற்கான நிபந்தனையாக அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர்.

## நாள் 2

### திங்கள் 28 மார்ச்

**ஜெப நோக்கம்:**

*1. சபை ஆழமான மனந்திரும்புதல் நிமித்தம் தொடர்ந்து தேவனோடு சார்ந்திருப்பதை நாடுகிறது.*

*2. துணை பொது மேற்பார்வையாளர்: சங்கை ரோன்னி சின்*

*3. அமைச்சரவை மற்றும் அதின் அமைச்சர்கள்*

AG PRAYER COMMISSION

# எழுந்து பிரகாசி

## அவருடைய வெளிச்சத்தை பெறுவது

*மத்தேயு 4:16*

தேவனே ஒளி அவரிடத்தில் இருள் இல்லை. அவருடைய ஒளியின் மூலம்தான் நாம் புத்துயிர் பெறுகிறோம், மாற்றப்படுகிறோம், விடுதலையோடு இருக்கிறோம் மற்றும் ஜீவிக்கிறோம். ஒளி இல்லாமல் ஜீவன் இல்லை. ஒளி வாழ்க்கைக்கு இன்றியமையாதது மற்றும் தேவன் இந்த ஒளியை நம்மோடுகூட பகிர்ந்துக் கொள்ள விரும்புகிறார். இருப்பினும் சிலர் ஒளியை விலக்கி இருளில் இருக்க விரும்புகின்றனர். அவர்கள் ஒளியை வெறுக்கிறார்கள், ஏனென்றால் அது அவர்களின் ஆத்துமாவின் இருளை, தவற்றை மற்றும் பெருமையை வெளிப்படுத்துகிறது. ஒளியை நிராகரிப்பது என்பது நமது இரட்சிப்பு, சுதந்திரம் மற்றும் ஆசீர்வாதத்தை மாத்திரமே பறித்துவிடும். ஆகவே, அவருடைய ஆவி மற்றும் அவருடைய வார்த்தையின் மூலம் அவருடைய ஒளியை அரவணைக்கிறோம், அவை நமக்கு தேவையான சுதந்தரத்தையும் சுகத்தையும் தருகிறது.

## நாள் 3

## செவ்வாய் 29 மார்ச்

**ஜெப நோக்கம்:**

1. *திருசபையில் காணப்படுகிற ஒவ்வொரு ஊனமான இருளையும் நீக்குவதற்கு தேவன் சபையின் மீது ஜீவனை கொடுக்கும் ஒளியை தருகிறார்.*
2. *தேவ சங்க செயர்குழு*
3. *பாராளுமன்ற உறுப்பினர்கள்*

# எழுந்து பிரகாசி

AG PRAYER COMMISSION

# வாரும் பரிசுத்த ஆவியானவரே

## நாள் 4
## புதன் 30 மார்ச்

*லூக்கா 4:18-19*

கிறிஸ்து தம்முடைய சீஷர்களை பரிசுத்த ஆவியானவருக்காகக் காத்திருக்கும்படி கட்டளையிட்டதுபோல், இன்று நாமும் உலகில் அவருடைய ஜீவனை மற்றும் வேலையைத் தொடங்குவதற்குத் திரும்பவும், பெற்றுக் கொள்ளவும், அவருடைய ஆவியின் வல்லமையை விசுவாசிக்கவும் தேவன் நம்மை அழைக்கிறார். பரிசுத்த ஆவியானவருடைய இடத்தை யாரும் எடுக்க முடியாது. பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் ஜீவன் இல்லை. பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் பாவிகள் இரட்சிக்கப்பட முடியாது. பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் எந்தவொரு வாழ்க்கையும் மாறாது. பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் சபை வளராது. பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் எந்தவொரு தேசமும் மாறாது. பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையும் பிரசன்னமும் மாத்திரமே இந்த மாற்றங்களை கொண்டு வர முடியும். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைக் கொள்ளையடிக்கும் எதற்கும் அவரை வியாபாரம் செய்ய வேண்டாம். மாறாக நமது வாழ்விலும், ஊழியத்திலும், திருசபைகளிலும் பரிசுத்த ஆவியானவரின் சரியான இடத்தைப் பெற அவரை வரவேற்போம்.

**ஜெப நோக்கம்:**

1. *பரிசுத்த ஆவியானவரின் கிரியையும் பிரசன்னமும் திருசபையை மீட்டெடுக்க வேண்டும் என்பதே.*
2. *தேவ சங்க மத்திய பகுதி*
3. *ஆட்சியாளர்கள் (அகோங் மற்றும் சுல்தான்கள்)*

AG PRAYER COMMISSION

# எழுந்து பிரகாசி

## மீண்டும் செய்யும் கர்த்தாவே

**நாள் 5**

**வியாழன் 31 மார்ச்**

*ஆகாய் 2:6-9*

இங்கே தேவன் தமது திருசபையை மீண்டும் ஒருமுறை கட்டியெழுப்புவார் என்று ஆகாய் தீர்க்கதரிசி அறிவிக்கிறார். இதற்கு முன்னமே அவர் செய்திருக்கிறார், மீண்டும் அவர் செய்ய முடியும். உண்மையில், இது அவர் கடந்த காலத்தில் செய்ததைவிட பெரிதாக இருக்கும். அதேபோல், எழுப்புதலின் நாட்கள் முடிந்துவிடவில்லை. பெந்தெகோஸ்தே நாளிலிருந்து, அவர் யுகங்கள் முழுவதும் எழுப்புதின் அலைகளை தொடர்ந்து அனுப்பினார். இருளான காங்களில், அவர் தமது வேலையையும் திருசபையை புதுப்பிக்கவும் தமது வல்மையையும் மகிமையையும் வெளிப்படுத்துகிறார். கடந்து செல்லும் ஒவ்வொரு அலையிலும், அவர் பின்பற்றுவதற்கு பெரிதான ஒன்றை உருவாக்குகிறார். தேவன் இறுதி அறுவடையை வரைவது மாத்திரமல்ல அவருடைய வருகைக்கு அவருடைய மணவாட்டியை ஆயத்தம் செய்கிறார். அப்படிப்பட்ட அலைக்கு நடுவே நாம் இருக்கிறோம். அவற்றை நாம் இழக்கக் கூடாது. அதற்கு பதிலாக, கர்த்தருக்குள் மேன்மையான கிரியைகளுக்கும் உன்னதங்களுக்கும் அதன் மீது ஏறி செல்வோமாக

**ஜெப நோக்கம்:**

1. *அவர் இன்று ஊற்றும் எழுப்புதல் அலையை திருசபை அங்கீகரித்து அதன் மீது சவாரி செய்ய வேண்டும்*
2. *AG KL-கிழக்கு பகுதி*
3. *நிதி அமைச்சகம்: பெரும் மதிப்பிற்குரிய செனட்தோர் தெங்கு டத்தோ செரி உத்தமா சவ்ருள் பின் தெங்கு அப்துல் அஷீஸ்*

PRAYER COMMISSION

# எழுந்து பிரகாசி

## தொடர்ந்து ஜெபத்தில் தரித்திருப்பது

**நாள் 6**
**வெள்ளி 1 ஏப்ரல்**

*அப்போஸ்தலர் 1:14*

எழுப்புதலுக்கான அடிப்படை திறவுக்கோலானது ஜெபமாகும். ஜெபத்தின் மூலம் எழுப்புதல் பிறக்கிறது, பெறப்படுகிறது, பகிர்ந்துக் கொள்ளப்படுகிறது அதோடுகூட நீடிக்கவும் படுகிறது. பொதுவாக ஜெபத்தின் பற்றாக்குறையால் எழுப்புதல் தாமதமாகிறது. அல்லது நடக்காமல் போகிறது. பெரும்பாலும் தேவ ஜனங்களின் சீரற்ற ஜெப வாழ்க்கை எழுப்புதல் அவர்களை கடந்து அல்லது நிறுத்துவதில் விளைவாயிக்கிறது. எழுப்புதல் அனுதின நிகழ்வாக இருக்க தேவன் விரும்புகிறார். எழுப்புதலில் நிலைத்திருக்கவும், நடக்கவும் முடியும் என்பதை இயேசு முன்மாதிரியாகக் காட்டி நிரூபித்தார். அத்தகைய அனுபவத்திற்கான திறவுகோலானது ஒழுக்கமான மற்றும் நிலையான ஜெப வாழ்க்கையாகும்.

**ஜெப நோக்கம்:**

1. *திருசபையின் உடைந்த பலிபீடங்கள் மீண்டும் கட்டப்பட்டு புதுபிக்கப்படும்*
2. *AG வடக்கு பகுதி*
3. *உள்துறை அமைச்சகம்: பெரும் மதிப்பிற்குரிய டத்தோ செரி அம்சா ஷய்னுடின்*

# எழுந்து பிரகாசி

AG PRAYER COMMISSION

## இப்பொழுதே எழுப்புதல்

*ஓசியா 6:2*

நாம் சேவிக்கும் தேவன் எழுப்புதலில் தேர்ச்சியுள்ளவர். அவரால் தலைகீழாக மாற்றவோ, உயிர்ப்பிக்கவோ, மாற்றவோ அல்லது மீட்டெடுக்கவோ முடியாத சூழ்நிலை ஒன்றும் இல்லை. முடியாததை முடிய செய்கிற தேவன் அவர். அவர் நம் இதயங்களை மாற்றவும், நம் வாழ்க்கையை மீட்டெடுக்கவும், விதிகளை மாற்றவும் தேசங்களை மாற்றவும் முடியும். தேவனுடைய தெய்வீக வருகையின் காலங்களில் சாத்தியமற்றது சாத்தியமாகும். எனினும் இந்த வாக்குத்தத்தங்களை நாம் கடைபிடிக்கும் வரை வாக்குறுதிகளாக மட்டுமே இருக்கும். நாம் செயல்படாதவரை அது நமக்கு நடக்காது. கிறிஸ்து பூமியில் இருந்தபோது அவருடைய குணப்படுத்துதலையும் ஆசீர்வாதத்தையும் அனைவரும் பெறவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். விசுவாசிப்பதற்கும் தங்கள் விசுவாசத்தின்படி செய்படுவதற்கும் தயாராக இருப்பவர்கள் மட்டுமே அவருடைய எழுப்புதல் வாக்குறுதியை பெறுவார்கள்.

### நாள் 7

### சனி 2 ஏப்ரல்

**ஜெப நோக்கம்:**

1. *தேவனுடைய தெய்வீக வருகையின் மத்தியில் திருசபையானது தனது திருப்புமுனையைக் கோருவதற்கும் பெறுவதற்கும் வேண்டும்*
2. *AG தெற்கு மாவட்டம்*
3. *சட்ட அமமைச்சர்: பெரும் மதிப்பிற்குரிய டத்தோ செரி வான் ஜுனைடி துங்கு ஜாவார்*

PRAYER COMMISSION

# எழுந்து பிரகாசி

*வாரம் 2 (3 ஏப்ரல் - 9 ஏப்ரல்)*

AG PRAYER COMMISSION

# எழுந்து பிரகாசி

## எழும்பி விசுவாசியுங்கள்

நாள் 8
ஞாயிறு 3 ஏப்ரல்

*மாற்கு 11:22-24*

தேவனுடைய வாக்குத்தத்தங்களை மெய்யாகவே மாற்றும் திறவுகோல் விசுவாசம். இன்றைய கேள்வி தேவனுடைய சித்தமா என்பது அல்ல, மாறாக நாம் நம்புகிறோமா என்பதுதான். ஊமை ஆவி பிடித்த மகனின் தந்தையை நோக்கி: 'நீ விசுவாசிக்க கூடுமானால் விசுவாசி, விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார் இயேசு' (மாற்கு 9:23). தேவன் செயலில் இருக்குபோது அவரால் மாற்ற முடியாத சூழ்நிலை ஒன்றுமில்லை. தேவன் தம்முடைய மணவாட்டிற்காக திரும்ப வருவதற்கு முன், மனிதகுலத்திற்குத் தம்முடைய மகிமையை வெளிப்படுத்த விரும்புகிறார். நம்மால் நம்ப முடியுமா? நாம் நம்புவோமா? ராஜ்யம் காத்திருக்கிறது, எழும்பவும் விசுவாசிக்கவும் துணிந்தவர்களுக்காக காத்திருக்கிறது.

**ஜெப நோக்கம்:**

1. *சபை எழும்பி இயற்கைக்கு அப்பால்பட்ட காரியத்தை விசுவாசிக்கிறது.*
2. *சபா தேவ சங்க சபைகள்*
3. *கல்வி அமைச்சர்: பெரும் மதிப்பிற்குரிய செனத்டர் டத்தோ டாக்டர் முகமது ராட்ஷி பின் முகமது ஜீடின்*

PRAYER COMMISSION

# எழுந்து பிரகாசி

## எழுந்து ஜீவியுங்கள்

நாள் 9

திங்கள் 4 ஏப்ரல்

*யோவான் 11:43-44*

திருசபையானது தன்னுடைய ஆவிக்குரிய கல்லறையிலிருந்து வெளியே வருமாறு இன்று பரலோகத்திலிருந்து ஒரு அழுகுரல் உள்ளது.

- நம்பிக்கையின்மை, பயம், ஊக்கமின்மை மற்றும் தேர்வியின் கல்லறையிலிருந்து திருசபையானது எழும்பும் நேரம் இது.
- திருசபை மீண்டும் எழும்புவதற்கான நேரம் இது, பரிசுத்த ஆவியானவர் மற்றும் அவருடைய வார்த்தையினால் பிரகாசிக்கவும், அவருடைய வல்லமையையும் மகிமையையும் அறிவித்து, வெளிப்படுத்தி வாழ வேண்டும்.

உயிருடன் இருப்பவர்களால் மட்டுமே தேவனுக்கு மகிமை கொடுக்க முடியும், மரித்தவர்களால் அல்ல. நீங்கள் வெளியே வந்து வாழுங்கள் என்று அவரது குரல் அழைப்பதை நீங்கள் கேட்கிறீர்களா? இருள், மரணம் மற்றும் தேர்வியின் கிரியைகளை உதறிவிட்டு இன்று மீண்டும் தேவனுடைய வாழ்க்கையில் பிரவேசிப்போம்.

**ஜெப நோக்கம்:**

1. *திருசபை எழுந்து தன்னுடைய ஆவிக்குரிய கல்லறையிலிருந்து வெளியே வந்து வாழ வேண்டும்*
2. *சரவாக் தேவ சங்க திருசபைகள்*
3. *நீதித்துறை*

# எழுந்து பிரகாசி

AG PRAYER COMMISSION

## எழுந்து நடவுங்கள்

நாள் 10

செவ்வாய் 5 ஏப்ரல்

*எபேசியர் 4:1-3*

அவருடைய அழைப்பிற்கு ஏற்ப நடப்பது என்றல் என்ன? நம் வாழ்வில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை பிரதிபலிக்கும் விதத்தில் நம்மை நடத்துவது என்பதாகும். நம்முடைய அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாய் இருந்த நாம், கிறிஸ்துவின் சிலவை மரணத்தினாலே கிறிஸ்துவுக்குள் உயிர்ப்பிக்கப்பட்டவர்களான நாம் இனி பாவத்திலும் இருளிலும் நடக்காமல், நீதியிலும் வெளிச்சத்திலும் நடக்க வேண்டும். நமது நடத்தை நமது அறிக்கையினிமித்தம் ஒத்துப்போக வேண்டும். பேச்சில் நடக்க வேண்டிய நேரம் இது. நாள் நம்மீது உதிக்கிறது. இருளின் செயல்களை விட்டு களைந்து, கிறிஸ்துவைத் தரித்துக்கொள்வதன் மூலம் தேவனுடைய மெய்யான ஒளியை வெளிப்படுத்துவோம். மாற்றமடைந்த நமது வாழ்க்கையானது ஜனங்களை நம் செய்தியை விசுவாசிக்க வைக்கும்.

**ஜெப நோக்கம்:**

1. *திருசபையானது தன்னுடைய அழைப்பிற்கு ஏற்றவாறு எழுந்து நடக்க வேண்டும்.*
2. *AG சீன மொழி பிரிவு*
3. *மலேசிய ஊழல் எதிர்ப்பு ஆணையம்: பெரும் மதிப்பிற்குரிய டத்தோ செரி ஆசாம் பின் பாக்கி*

AG PRAYER COMMISSION

# எழுந்து பிரகாசி

## எழுந்து போராடு

நாள் 11

புதன் 6 ஏப்ரல்

*யூதா 1:3*

நாம் எதையாவது கிடைக்க வேண்டுமென்று தீவிரமாக விரும்பினால், அதற்காக நாம் போராட வேண்டும். அப்படியே இருந்தாலோ அல்லது அமைதியாக இருந்தாலோ எதுவும் நடக்காது. போராடுவது என்பது போராட்டம், பாடுபடுவது, மல்யுத்தம் செய்வது, தரித்து நிற்பது, போரிடுவது, சண்டையிடுவது, தற்காப்பது, வெல்வது அல்லது உரிமை கோருவது என்பதாகும். கிரியை இல்லாததினால் பெரும்பாலும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நாம் இழக்கிறோம். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் இன்னும் மாறாமல் அப்படியே இருக்கின்றன. அவை ரத்து செய்யப்படவுமில்லை மாற்றப்படவுமில்லை. அவை இன்னும் செல்லுபடியாகும் மற்றும் அவைகளுக்காகப் போராடுபவர்களும் பெறக்கூடியவை. திருசபை தனது கிரியையற்ற தன்மையிலிருந்து எழுந்து தேவனுடைய ராஜ்யத்திற்காக போராடத் தொடங்குவதற்கான நேரம் இது.

**ஜெப நோக்கம்:**

1. *திருசபை எழும்பி தன் சுதந்திரத்திற்காக போராட வேண்டும்*
2. *AG தமிழ் மொழி பிரிவு*
3. *வழக்கறிஞர் பொது அலுவலகம்: பெரும்மதிப்பிற்குரிய இட்ரூஸ் அருண்*

AG PRAYER COMMISSION

# எழுந்து பிரகாசி

## எழுந்து பிரகடனம் செய்யுங்கள்

நாள் 12

வியாழன் 7 ஏப்ரல்

*மாற்கு 16:15-16*

நற்செய்தி என்பது அனைவரும் கேட்க வேண்டிய மிக அவசியமான மற்றும் முக்கியமான செய்தியாகும். நமது முதல் மற்றும் முதன்மையான நோக்கமானது நாம் ஏன் ஒரு சபையாக கருதப்படுகிறோம் என்பதாகும் - நற்செய்தியை அறிவிப்பது. சுவிசேஷத்தைப் பற்றி அவர் வெட்கப்படவில்லை என்று அப்போஸ்தலன் பவுல் அறிவித்தார், ஏனென்றால் தேவனுடைய வல்லமை மனிதனை காப்பாற்றுகிறது. நமது வாழ்வின் நித்திய முறைமையை மாற்றியமைத்து பாதுகாக்கக்ககூடிய ஒரே செய்தி இதுவாகும். வீழ்ந்த மக்களாகிய நாம் நித்திய சாபத்திற்கு ஆளாகியிருக்கிறோம், ஆனால் தேவன் தம்முடைய இரக்கத்தில் அவருடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய நியாயத்தீர்ப்பை எடுத்து, நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை விடுவித்தார். இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராகப் பெறுவதன் மூலம் இன்று மனிதன் விடுவிக்கப்பட்டு நித்திய ஜீவனைப் பெற முடியும். இப்பொழுது இந்த நற்செய்தியை தேவன் நம்மிடம் ஒப்படைத்துள்ளார். கிறிஸ்து இல்லாத நித்தியத்திற்கு உலகம் தவறுவதைப் பார்த்து நாம் அமைதியாக இருக்க முடியுமா? எனவே நாம் எழுந்து இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்போம்!

**Prayer Focus:**

1. *திருசபை எழுந்து நற்செய்தியை அறிவிக்க வேண்டும்.*
2. *AG மலாய் மொழி பிரிவு (EM & OA)*
3. *இனம் நல்லிணக்கம் மற்றும் அமைதி*

AG PRAYER COMMISSION

# எழுந்து பிரகாசி

## எழுந்து புறப்படுங்கள்

*ஏசாயா 6:8*

அச்சிடுதல் மற்றும் டிஜிட்டல் புரட்சியானது நற்செய்தியைப் பரப்புவதற்கும் பெரிய ஆணையத்தின் முன்னேற்றத்திற்கும் பெரிதும் உதவியது. அவை தேவனுடைய பணிக்கென்று நாம் பயன்படுத்த வேண்டிய சிறந்த கருவிகள் என்றாலும், அவை மனித தொடுதலுக்கு மாற்றாக இல்லை. மனிதன் மீதுதான் தெவன் தம்முடைய ஆவியை ஊற்றுகிறார். மனிதன் மூலமாகவே வார்த்தை மாம்சமாகி மனிதனிடையே வெளிப்படுகிறது. இன்னும் தேவன் தமது வேலையை செய்து முடிக்கும்படிக்கு ஆண்களையும் பெண்களையும் அழைத்துப் பயன்படுத்துகிறார். அவர்களே பூமியில் அவருடைய முதன்மையான கருவிகள். இன்று பெரிதான வேலைக்கான பணி இன்னும் முடியவில்லை. அவருடைய வார்த்தையை கேட்கும்படிக்கு காத்திருக்கும் இன்னும் பல சந்திக்கப்படாத மற்றும் தொடப்படாத ஜனங்கள் உள்ளனர். நம் திருசபையின் வசதியை விட்டுவிட்டு அவர்கள் இருக்கம் இடத்திற்குச் செல்வததான் அவர்களை சென்றடைய ஒரே வழி.

**நாள் 13**

**வெள்ளி 8 ஏப்ரல்**

**ஜெப நோக்கம்:**

1. *தேவன் அனுப்பும் இடத்திற்கு திருசபை செல்ல வேண்டும்*
2. *AG தேசிய சிறுவர்கள் துறை*
3. *மத சகிப்புத் தன்மை மற்றும் சுதந்திரம்*

AG PRAYER COMMISSION

# எழுந்து பிரகாசி

## எழுந்து ஆசீர்வதியுங்கள்

நாள் 14
சனி 9 ஏப்ரல்

*ஆதியாகமம் 12:2*

ஆபிரகாம் ஆசீர்வதிக்கப்பட்டதைப் போலவே, தேவனுடைய ஜனங்களாகிய நாம் பரலோகத்திள்ள உன்னதங்களிலுள்ள ஒவ்வொரு ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் (எபேசியர் 1:3). இந்த ஆசீர்வாதங்கள் ஆவிக்குரிய மட்டுப்படுத்தப்பட்டவை அல்ல, ஆனால் பொருளுக்கும் நீடிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட ஜனங்களாக, தேவன் தம்முடைய ஆசீர்வாதங்களை நமக்குள் பதுக்கி வைக்க விரும்பவில்லை மாறாக, நம்மை சுற்றியுள்ள ஏழை ஜனங்களுடன் பகிர்ந்துக் கொள்ள விரும்புகிறார். நம் மூலமாகவே அவர் அக்கறையையும் அன்பையும் உலகிற்கு வெளிப்படுத்துகிறார். நம்முடைய ஆவிக்குரிய நிலையை குறித்து அவர் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறாரோ, அதே அளவு தேவன் நம்முடைய பூமிக்குரிய தேவைகளையும் குறித்து அக்கறையாக இருக்கிறார். இன்று, பூமியில் அவருடைய சரீரமாக அவரைப் பிரதிநிதிக்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே, தேவன் அக்கறை காட்டுகிறார் என்பதை உலகம் அறியும்படிக்கு நம்முடைய ஆசீர்வாதங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துக் கொள்ள தொடங்குவோம். அவர் கொடுத்ததை நாம் பகிர்ந்துக் கொள்ளும்போது, தேவன் நம் வாழ்வில் இன்னும் அதிகமாக ஊற்றுவார்.

**ஜெப நோக்கம்:**

1. *சபை எழும்பி ஆசீர்வதிக்க வேண்டும்*
2. *ரோயல் ரேஞ்சஸ்*
3. *திருமணம் மற்றும் குடும்ப நிறுவனம்*


AG PRAYER COMMISSION
எழுந்து பிரகாசி
அவர் உயிர்தெழுந்தார்!
வாரம் 3 (10 ஏப்ரல் - 16 ஏப்ரல்)

# எழுந்து பிரகாசி

AG PRAYER COMMISSION

# கிறிஸ்து உயிர்தெழுந்தார்!

நாள் 15

ஞாயிறு 10 ஏப்ரல்

*மத்தேயு 20: 17-19*

இந்த வாரம் கிறிஸ்து எருசலேமிற்குள் நுழைந்ததிலிருந்து தொடங்கும் பெரிய வெற்றியின் வாரமாக அழைக்கப்படுகிறது. கிறிஸ்து அறையப்பட்டபோது குறகிய கால கொண்டாட்டம் விரைவில் திகிலும் குழப்பத்திலும் இறங்கியது. மத தலைவர்கள் இறுதியாக கிறிஸ்துவைத் தாற்கடித்து, அவரை பின்பற்றியவர்கள் அவர்மீது கொண்டிருந்த நம்பிக்கையை முடிவுக்குக் கொண்டு வந்ததாக தோன்றியது. தீமைக்கு எதிராளி எவற்றை காட்டுகிறானோ அவை எல்லாவற்றிலும் தேவன் மிக பெரிய ஜெயமாக மாற்றினார். சிலுவையில் அறையப்பட்டு அடக்கம் செய்யப்பட்ட கிறிஸ்து என்றென்றும் ஜீவிப்பதற்காக மூன்றாம் நாளில் உயிர்தெழுந்தார்! ஆல்லோயா! அவர் வாழ்வதால் நம்முடைய நம்பிக்கையும், ஜெயமும் இரட்சிப்பும் நிச்சயமே. அவர் வாழ்வதால் அவருடைய மகிமைக்காக நாமும் எழுந்து பிரகாசிக்க முடிகிறது.

**ஜெப நோக்கம்:**

*1. ஊடகம் மற்றும் டிஜிட்டல் உலகம்*

*2. AG வாலிபர்கள்*

*3. GE 15: வாக்களிப்பாளர்கள்*

AG PRAYER COMMISSION

# எழுந்து பிரகாசி

## மரணம் விழுங்கியது

**நாள் 16**

**திங்கள் 11 ஏப்ரல்**

*1 கொரிந்தியர் 15:54-55*

மனிதனின் மிக பெரிய பயமும் இறுதி எதிரியும் மரணம்தான். மரணத்தின் மூல காரணமே பாவம் மற்றும் மரணம் என்பது குறிப்பிட்ட உண்மை, அது நம்பிக்கையின்மை மற்றும் விரக்தியின் உணர்வை கொண்டு வருகிறது. இருப்பினும் கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்தெழுந்தபோது, மனிதன் மீதான மரணத்தின் பிடி இறுதியாக உடைக்கப்பட்டது. மரணம் என்ற அணையை உடைத்து நிமித்தம் வாழ்க்கையின் வெள்ளமும் உடைந்து விட்டது. அவரது வெற்றி மனிதனுக்கு மரணத்தை வெல்வதற்கான வழியை திறந்துவிட்டது. மரணத்தின் பயத்தினாலோ அல்லது அதிகாரத்தினாலோ நாம் இனி அடிமையாக இருக்க வேண்டியதில்லை. மாறாக, நாம் அதன் வல்லமையிலிருந்து விடுபட்டு, கிறிஸ்துவின் வல்லமை மற்றும் வெற்றியின் மூலம் நம்பிக்கையுடன் வாழ ஆரம்பிக்கலாம்.

**ஜெப நோக்கம்:**

1. *வணிக நிறுவனம் மற்றும் சந்தை*
2. *தேவ சங்க ஜெப ஆணையம் (AGPC)*
3. *GE 15: வேட்பாளர்கள்*

AG PRAYER COMMISSION

# எழுந்து பிரகாசி

## நம்பிக்கை மீட்டெடுக்கபட்டது

**நாள் 17**

**செவ்வாய் 12 ஏப்ரல்**

*1 பேதுரு 1:3*

கிறிஸ்துவின் வருகை சீஷர்களுக்கு மிகுந்த நம்பிக்கையை தந்தது. அவர் நோயுற்றவர்களைக் குணப்படுத்துவதையும், ஒடுக்கப்பட்டவர்களை விடுவிப்பதையும், பசித்தவர்களுக்கு உணவளிப்பதையும், தாழ்த்தப்பட்டவர்களை உயர்த்துவதையும் அவர்கள் கண்டார்கள். தேசத்திற்கு விடுதலையைக் கொண்டுவரும் ஆதிகால தீர்க்கதரிசிகளால் தீர்க்கதரிசனம் சொல்லப்பட்ட இயேசு மெய்யாகவே கிறிஸ்து என்று அவர்கள் விசுவாசித்தார்கள். அப்பொழுது சோகம் ஏற்பட்டது. அவர்களுடைய மேசியா சிலுவையில் அறையப்பட்டார். திடீரென்று அவர்களின் நம்பிக்கைகள் மற்றும் கனவுகள் அனைத்தும் துண்டு துண்டாக சிதைந்து விட்டது. ஆனால் அவர்களின் அத்தியாயம் அங்கு முடிவடையவில்லை. சொன்னபடியே மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து உயிர்தெழுந்தார். அவருடைய உயிர்தெழுதல் புது நம்பிக்கையை கொண்டு வந்தது. அவர் உயிரோடிருப்பதால் நம்முடைய நம்பிக்கையும் வாழ்கிறது.

**ஜெப நோக்கம்:**

1. *மருத்துவ நிறுவனமும் சுகாதாரமும்*
2. *AG வெளி ஊழியம்*
3. *GE 15: தேர்தல் ஆணையம்*

AG PRAYER COMMISSION

# எழுந்து பிரகாசி

## நிச்சயமும் உறுதியும்

நாள் 18

புதன் 13 ஏப்ரல்

*எபிரெயர் 6:19*

முதலில், கிறிஸ்து உயிருடன் காணப்பட்ட செய்தி சீஷர்களால் சந்தேகத்திற்குரியதாயிருந்தது. இருப்பினும், கிறிஸ்து அவர்களுக்கு உடல் ரீதியாக தோன்றியபோது எல்லா சந்தேகங்களும் அழிக்கப்பட்டு நம்பிக்கை மீட்டெடுக்கப்பட்டது. கிறிஸ்துவின் உயிர்தெழுதலுக்குப் பிறகு சீஷர்கள் புரிந்துகொண்ட இந்த நம்பிக்கையானது பெரிய அளவில் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். முதாவது, இது மறுக்க முடியாத நம்பிக்கை- மரணம்கூடு அதை அணைக்க முடியாது. எத்தகைய பின்னடைவு ஏற்பட்டாலும் தேவனால் அதை மீட்டெடுக்க முடியும். இரண்டாவதாக, நம்முடைய நம்பிக்கையின் மூலமாக கிறிஸ்து, இனி ஒருபோதும் மரிக்காமல் என்றென்றும் வாழ்கிறார். நமது நம்பிக்கை நித்தியமானது, அவற்றை ஒருபோதும் பறிக்க முடியாது என்பதே இதன் அர்த்தம்.

**ஜெப கவனிப்பு:**

1. *பெரிதான வேலையின் எழுப்புதல்*
2. *AG வெளி ஊழியம்*
3. *GE 15: தேர்தல் பார்வையாளர்கள்*

AG PRAYER COMMISSION

# எழுந்து பிரகாசி

## தேவ குமாரன்

நாள் 19

வியாழன் 14 ஏப்ரல்

*ரோமர் 1:4*

இயேசு வந்தவுடன் தம்மை தேவ குமாரன் என்று அழைத்தார். அவர் தேவனுக்கு ஒப்பானவர் என்று கூறியதால் இது ஒரு புண்படுத்தும் தலைப்பு. இதன் காரணமாகவே அவர் சிலுவையிலறையப்பட்டார். மதத் தலைவர்களுடனான அவரது சந்திப்புகளில் ஒன்றில், அவர் தேவனுடைய குமாரன் என்பதை நிரூபிக்க ஒரு அடையாளத்தை அவரிடம் கேட்டார்கள். பிசாசும்கூட வனாந்தரத்தில் தேவனுடைய குமாரன் என்பதற்கான ஆதாரத்தை கோரினான். யோனாவின் அடையாளம் மட்டுமே அவர்களுக்கு வழங்கப்படும் என்று இயேசு பதிலளித்தார். (மத்தேயு 12:38-40)- அவர் மரித்து மூன்றாம் நாளில் உயிர்தெழுவார். இயேசு தாம் சொன்னபடியே மரித்தோரிலிருந்து உயிர்தெழுந்தார், அவர் பரலோகத்திலிருந்து வந்த தேவனுடைய குமாரன் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்தார்.

**ஜெப நோக்கம்:**

1. *அழிந்துப் போகிறவர்களின் இரட்சிப்பு*
2. *மலேசிய வேதாகம கல்லூரி*
3. *GE 15: ஊழல் மற்றும் கோவிட்-19க்க எதிரான பாதுகாப்பு*

AG PRAYER COMMISSION

# எழுந்து பிரகாசி

## நீங்கள் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்

**நாள் 20**

**வெள்ளி 15 ஏப்ரல்**

*அப்போஸ்தலர் 1:8*

இயேசு கல்லறையிலிருந்து எழுந்தபோது, சாட்சியில்லாமல் இவ்வுலகை விட்டுச் செல்லவில்லை. அவர் இனி ஜனங்களுக்குத் தொன்றாவிட்டாலும், அவர் உண்மையில் மரித்தோரிலிருந்து உயிர்தெழுப்பப்பட்டார் அதுமட்டுமின்றி பரலோகத்திலிருந்து தேவனுடைய மெய்யான குமாரன் என்பதற்கு மறுக்க முடியாத பல சான்றுகளுடன் தம்மைத் தம் சீஷர்களுக்கு வெளிப்படுத்தினார். தம்மை உயிருடன் காட்டிய பின்னர், அவர் தேவனின் மெய்யான குமாரன் என்பதற்கு சாட்சியாக அவர்களை தம் உயிர்தெழுதலின் சாட்சிகளாக நியமித்தார். இன்று, தேவன் நம்மையும் அவருடைய உயிர்தெழுதலுக்கு சாட்சிகளாக அழைக்கிறார். உயிர்தெழுதல் ஒரு வரலாறு நிகழ்வாக இருந்தாலும், நம் இரட்சகர் இன்றும் உயிருடன் இருக்கிறார். தம்முடைய ஜனங்கள் அவரிடம் ஜெபிக்கும்போது அவர் இன்னும் அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்பதங்களைச் செய்துக் கொண்டிருக்கிறார். இந்த அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்கள் அவரது உயிர்தெழுதலின் சாட்சியாகும். இயேசு உயிரோடு இருக்கிறார், எனவே தைரியமாக சாட்சிக் கொடுப்போம்.

**ஜெப நோக்கம்:**

1. *சபையின் ஒற்றுமை*
2. *மலேசிய தமிழ் வேதாகம கலாசாலை*
3. *GE 15: நல்ல வாக்குப்பதிவு*

PRAYER COMMISSION

# எழுந்து பிரகாசி

## அவருடைய உயிர்தெழுதலின் வல்லமை

**நாள் 21**

**சனி 16 ஏப்ரல்**

*பிலிப்பியர் 3:10*

இயேசு தம்முடைய உயிர்தெழுதலுக்கும் பரமேறிய அடைப்பட்ட காலத்தில் நாற்பது நாட்கள் தம் சிஷர்களுக்கு போதித்து கற்றுக்கொடுத்தார். நூற்பது நாட்களின் முடிவில், பரிசுத்த ஆவியானவருக்காக காத்திருக்கும்படி இயேசு அவர்களுக்கு கட்டளையிட்டார். அவருடைய மூன்று வருட ஊழியத்தின் போது அவருக்கு கொடுக்கப்பட்ட அதே ஆவியானவர், அவரை மரித்தோரிலிருந்து எழுப்பிய அதே ஆவியானவர்தான், அவர் இப்போது அவருடைய சபைக்கு கொடுக்க விரும்புகிறார். இந்த ஆவியானவர் மூலமாகவே உலகத்தில் செயல்படும் இருள் மற்றம் மரணத்தின் அனைத்து வல்லமைகளையும் அவர்கள் மேற்கொள்வார்கள். ந்த ஆவியானவர் மூலமாகதான் அவர்கள் பெரிதான வேலையின் பணியை முடிப்பார்கள். ஆகையால், அவருடைய உயிர்தெழுதலின் வல்லமை நம்மில் வாழ்ந்து, செயலாற்றுகிறது என்பதை அறிந்து, தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் எழுந்து அவருக்கு ஊழியம் செய்வோம். (ரோமர் 8:11)

**ஜெப நோக்கம்:**

1. *தேசத்தி எழுப்புதல்*
2. *மலேசிய தேவ சங்கம்*
3. *GE 15: நல்ல முடிவு*